31st March 1969]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) வேலை நீக்கம் செய்யப்படு வதற்கு ஆணையிடப்பட்டுள்ள படைத்துறை சாராத இம்மாநில அரசாங்க அலுவலர்கள் 162 பேர்கள்.

(இ) வேலை நீக்கம் செய்யப்பெற்ற பணியாளர்களில் பெரும்பான்மை யினர் தற்காலிகமாகவே நியமிக்கப்பட்டவராதலின், மாற்று வேலை வாய்ப்பு அளிக்கும் பொறுப்பு அரசாங்கத்துக்கு இல்லை. ஆனாலும் வேலை நீக்கம் செய்யப்பட்ட பணியாளர்களுக்கு மாற்று வேலை வாய்ப்புத் தேடித் தருவதில் உதவுமாறு தேசீய காவலர் படையின் தமிழ்நாடு-புதுச்சேரி இயக்குநர் வேலை தேடித்தரும் நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளார். நீண்ட காலம் பணிபுரிந்துள்ள சில பணியாளர்களைக் காலி இடங்கள் இருந்தால் பணிக்கு எடுத்துக் கொள்ளுமாறு கேட்டு பிற துறைத் தலைவர் களுக்கு மேற்சொன்ன இயக்குநர் கடிதம் எழுதியுள்ளார்.

N.C.C. Class

* 316. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Central Government have announced that N.C.C. class is not compulsory ;

(*b*) whether they have prescribed proficiency in other games instead of N.C.C. ; and

(*c*) the amount of grant given by the Central Government for N.C.C. classes during the financial year 1966-67 ?

என். சி. சி. வகுப்பு

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமை சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) என்.சி.சி. வகுப்பு கட்டாயமில்லையென மத்திய அரசு அறிவித் துள்ளதா ?

(இ) இதற்குப் பதிலாக வேறு விளையாட்டுகளில் தேர்ச்சி பெற வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளதா ?

(உ) என். சி. சி. வகுப்பிற்காக மத்திய அரசு 1966–67-ம் நிதி ஆண்டில் எவ்வளவு உதவித் தொகை கொடுத்தது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ), & (இ) தேசீய விளையாட்டு நிறுவனம், தேசியப்பணிப்படை ஆகிய இவற்றுடன் தேசீய மாணவர் படை விருப்ப நிறுவனமாக ஆக்கப்பட வேண்டும் என்றும், அம்மூன்று நிறுவனங்களில் ஏதாவது ஒன்றில், பட்டப்படிப்பின் முதல், இரண்டாம் ஆண்டு மாணவர்கள் ஒவ்வொருவரும் பங்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் செயற்குறிப்பை மத்திய அரசு கொண்டு வந்தது.

(உ) பாதுகாப்புப் பணி அதிகாரிகளுக்கும், ஆசிரியர்களுக்கும், தேசீய மாணவர் படை இயக்குனரகத்தின் மத்தியக் குழுப்பணியாளர் குறித்த செலவு, போர்த்தளவாடங்கள், மாணவர் படைப் பிரிவிற்கு வேண்டிய உருப்புகள், இராணுவ வண்டிகள், பயிற்சி சாதனங்கள் முதலியவற்றுக்காக ஏற்படும் செலவுகளை மத்திய அரசு அதனுடைய நிதிகளிலிருந்து நேரடியாக அளிக்கும். தேசீய மாணவர் படை முகாம்களில் மாநில அரசுகளுக்கு ஏற்படும் செலவுகளில் 50 சதவீதத்தை ஈடு செய்ய மத்திய அரசு ஒப்புக்கொண்டது. 1966–67-ல் மத்திய அரசினருக்கு ஏற்பட்ட செலவுத் தொகையில் சரியான கணக்கு கிடைக்கவில்லை. 1966–67-ல் முகாம்களில் ஏற்பட்ட செலவுகளில் 50 சதவீதமாகிய ரூ. 6,84,199-யை மத்திய அரசு கொடுத்து ஈடுசெய்தது.